

விக்கிரவாண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அரசு வழக்கறிஞராகப் பொறுப்பேற்றுள்ள வழக்கறிஞர் பொன். கோபு, உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. ஆகியோரை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி. இராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.35.14 கோடி மதிப்பீட்டில் 112 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,ஆக. 15 -

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம் குன்னம் தொகுதியில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் அரியலூர் மாவட்டத்தில் 28.07.2023 அன்று செந்துறை ஒன்றியத்தில் ஆனந்தவாடி, சின்ன ஆனந்தவாடி, உஞ்சினி, பரணம், செம்மண்பள்ளம், கீழமாளிகை, நல்லாம்பாளையம் ஆகிய பகுதிகளில் ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் 15 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளையும், தொடர்ந்து 31.07.2023 அன்று தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிச்சனூர், வெண்மான்கொண்டான், சுத்தமல்லி, பருக்கல், கார்குடி, குஞ்சுவெளி, குணமங்கலம், கீழநத்தம், கடம்பூர் ஆகிய பகுதிகளில் ரூ.13.58 கோடி மதிப்பீட்டில் 25 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளையும், 01.08.2023 அன்று அரியலூர் ஒன்றியத்தில் உசேனாபாத், கயர்லாபாத், நுரையூர், பூமுடையான்பட்டி, இலுப்பையூர், பொய்யாத நல்லூர், தாமரைக்குளம், தவுத்தாய்குளம், வாலாஜா நகரம், பெரியநாகலூர் ஆகிய பகுதிகளில் ரூ.7.67 கோடி மதிப்பீட்டில் 33 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளையும், 02.08.2023 அன்று திருமானூர் ஒன்றியத்தில் வாரணவாசி, பார்பனஞ்சேரி, கீழப்பழுவூர், கீழையூர், கீழக்காவட்டாங்குறிச்சி, அயன்சுத்தமல்லி, பளிங்காநத்தம், கண்டிராதீர்த்தம், புதுக்கோட்டை, திருமழபாடி, சன்னாவூர் ஆகிய பகுதிகளில் ரூ.6.91 கோடி மதிப்பீட்டில் 25 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இன்றையதினம் அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இதன்படி செந்துறை ஒன்றியம், பெருமான்டி கிராமத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.172.70 இலட்சம் மதிப்பீட்டில் நக்கம்பாடி முதல் பெருமான்டி 0/02/400 வரை தார்ச் சாலை அமைத்தல் பணியினையும், அதனைத் தொடர்ந்து குழுமூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10.29 இலட்சம் மதிப்பீட்டில் செம்புரான் ஏரி ஆழப்படுத்ததுதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினையும், ரூ.16.31 இலட்சம் மதிப்பீட்டில் குழுமூர் குழுமூர் புதுக்காலனியில் கழிவுநீர் வாய்க்கால் (230 மீ) அமைத்தல் பணியினையும், ரூ.8.67 இலட்சம் மதிப்பீட்டில் குழுமூர் TNC அருகில் கதிரடிக்கும் களம் அமைத்தல் பணியினையும், பின்னர், சேடக்குடிகாடு கிராமத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.51.93 இலட்சம் மதிப்பீட்டில் ஜெயங்கொண்டம் செந்துறை சாலை சேடக்குடிகாடு சாலை 0/01/080 வரை சாலை அமைத்தல் பணியினையும், அதனைத் தொடர்ந்து பொன்பரப்பி ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.10.98 இலட்சம் மதிப்பீட்டில் பொன்பரப்பி ஆதிதிராவிடர் காலனியில் தார் சாலை (305 மீ) அமைக்கும் பணியினையும், ரூ.7.69 இலட்சம் மதிப்பீட்டில் பொன்பரப்பி ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை (107 மீ) அமைக்கும் பணியினையும், ரூ.9.95 இலட்சம் மதிப்பீட்டில் பொன்பரப்பி ஆதிதிராவிடர் காலனியில் கழிவுநீர் வாய்க்கால் (189 மீ) அமைத்தல் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமான பொருட்களை கொண்டு விரைவில் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறுகளத்தூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.9.84 இலட்சம் மதிப்பீட்டில் சிறுகளத்தூர் பெரிய ஏரி ஆழப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினையும், ரூ.2.33 இலட்சம் மதிப்பீட்டில் சிறுகளத்தூர் ஊராட்சியில் சிமெண்ட் சாலை (30 மீ) அமைக்கும் பணியினையும், ரூ.8.43 இலட்சம் மதிப்பீட்டில் சிறுகளத்தூர் வடக்குபட்டியில் சிமெண்ட் சாலை (123 மீ) அமைத்தல் பணியினையும், ரூ.9.24 இலட்சம் மதிப்பீட்டில் சிறுகளத்தூர் அருந்ததியர் தெருவில் கழிவுநீர் கால்வாய் (90 மீ) அமைத்தல் பணியினையும், ரூ.7.97 இலட்சம் மதிப்பீட்டில் சிறுகளத்தூர் ஊராட்சியில் கதிரடிக்கும் களம் அமைத்தல் பணியினையும், பின்னர் துளார் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடை கட்டடம் அமைத்தல் பணியினையும் துவக்கி வைத்துப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இதன் மூலம் அரியலூர் மாவட்டத்தில் செந்துறை, தா.பழூர், அரியலூர், திருமானூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.35.14 கோடி மதிப்பீட்டில் 112 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பி.ஆர்.பாண்டியன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆதி. இளங்கோவன்,

ஒன்றிய துணை செயலாளர்கள் காளமேகம்,கோடி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சே.சித்ரா, ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், கழக நிர்வாகிகள் சிவபிரகாசம், வாசு, ரமணி, ஆனந்த், மாரிமுத்து, வெற்றி, முத்து மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் முன்னிலையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அவிநாசி ஊராட்சி ஒன்றியம், திருமுருகன்பூண்டி நகராட்சி மற்றும் அவிநாசி பேரூராட்சி பகுதிகளில் நடைபெற்றும் வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி, வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயகுமார், பேரூராட்சி செயல் அலுவலர் ராமலிங்கம், திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையாளர் ஆண்டவன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில், செஞ்சி - மயிலம் - திண்டிவனம் தொகுதிகளில்

# முத்தமிழறிஞர் கலைஞருக்கு சிலை அமைக்கப்படும்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

விழுப்புரம், ஆக. 15 -

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம் திண்டிவனம், ஆகிய மூன்று தொகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிலை அமைப்பது என தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்செஞ்சியில் நடைபெற்றது.

மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், பொருளாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செயற்குழு உறுப்பினருமான விஜயகுமார்அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும்,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுமுத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம், ஆகிய மூன்று தொகுதிகளிலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிலை அமைப்பது எனவும்,

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை அனைத்து ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் 100 நிகழ்ச்சிகளுக்கு குறையாமல் நடத்துவது எனவும்,

விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும்கழக கொடி ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நலிவுற்றவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி கலைஞரின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடுவது எனவும்,

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் இரண்டு ஆண்டு சாதனைகளை வீடுகள் தோறும் சென்று தின்னை பிரச்சாரம் மேற்கொள்ளவும், ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் பிரச்சாரம், மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத்துவது எனவும்,

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழகங்களில் பாகமுகவர்கள்கூட்டங்கள் நடத்துவது,அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழகங்களில் அதிக அளவில் உறுப்பினர்கள் சேர்ப்பது,விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மூத்த கழக முன்னோடிகளுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டத்தின் சார்பாக பொற்கிழிவழங்குவதற்கும், 18.8.23அன்று ராமேஸ்வரத்தில்முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் நடைபெறும் மீனவர்கள் மாநாட்டிற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் பகுதியில் இருந்து 50மேற்பட்ட வாகனங்களில் சென்று மாநாட்டில் கலந்து கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி சேது நாதன் சீதாபதி சொக்கலிங்கம் செந்தமிழ் செல்வன் மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனி சின்னராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வராஜ் ,மணிவண்ணன், வீடுர் ரவி ,சாந்தி ஏழுமலை,ஒன்றிய செயலாளர்கள்விஜயராகவன், பச்சையப்பன்,நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, மணிமாறன், செழியன், சொக்கலிங்கம், ராஜாராமன், தயாளன், பழனி, ரவிசந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், அனந்தபுரம் பேரூர் செயலாளர் சம்பத்,மாவட்ட அணி அமைப்பாளர்கள்ராஜசக்தி, அன்சாரி, மொக்தியார் அலிமஸ்தான்,ரவிச்சந்திரன், சக்தி பிரியன், அண்ணாதுரை, கே. செந்தில்குமார், பா. செந்தில்குமார், புலவர் தமிழரசன், கோ. தமிழரசன், சந்திரன், விஜயராகவன், சிவகாமி, திண்டிவனம்நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், அனந்தபுரம் பேரூர் தலைவர் முருகன்,செஞ்சி துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ,கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

### வி. மணவெளி - திரிவேணி நகரில்

# ரூ. 27 லட்சம் செலவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, ஆக. 15 -

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி, வி. மணவெளி கிராமம், திரிவேணி நகர், இரண்டாவது பிரதான சாலையில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூ. 26 லட்சத்து 76 ஆயிரம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று காலை திரிவேணி நகர் சிவன் கோவில் அருகில் நடந்தது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வில்லியனூர் கொம்யூன் ஆணையர் ஆறுமுகம், செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா, ஊர் முக்கிய ஸ்தர்கள் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் தர்மராஜ், பாலகுரு, சபாபதி, தட்சிணாமூர்த்தி, கலியபெருமாள், மிலிட்டரி சிவா, வாசு, அருள், ஹரி, ரமேஷ், ராஜேந்திரன், வேலு, முருகன், செந்தில்நாதன், லட்சுமணன், விநாயகமுருகன், சரவணன், மணி, நடராஜன், மதியழகன், புருஷோத்தமன், கோபிநாதன், சுரேஷ், விஜயராகவன், கணேசன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, சோமசுந்தரம், செல்வநாதன், ராஜி, முஜி பாய், அங்காளன், சரவணன், ரமேஷ், நாவப்பன், சொக்கலிங்கம், காளி, ராமதாஸ், முருகையன், செல்வநாயகம், ஜனா, சுப்பிரமணி, வரதன், பாலு, நடராஜன், கார்த்திகேயன், அன்பு, மந்திரி குமார், ரங்கராஜ், தட்சிணாமூர்த்தி, ராமானுஜம், முத்து, கோதண்டம், மனோ, ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காரைக்காலில் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருநள்ளாறு ரோடு காமராஜர் சாலை சந்திப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது இந்த பொதுக் கூட்டத்திற்கு மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினரும் நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நாகராஜன் தலைமை தாங்கிட மாநில மாணவர் அணி அமைப்பாளர் ஜவகர் வரவேற்புரை ஆற்றிட மாநிலத் துணை அமைப்பாளர் காசிநாதன் பொதுக்குழு உறுப்பினர்கள் சேகர் ராஜ் மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத், தலைமை கழக சொற்பொழிவாளர் நாகை நாக ராஜன், மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் மற்றும் இலக்கிய அமைப்பாளர் அமுதா ஆறுமுகம், மாநில பொருளாளர் சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜ்மோகன், சேகர், இளைஞர் அணி அமைப்பாளர் முகமது ரிபாஸ் ஆகியோர் தலைவரின் பெருமைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியின் போது மாநிலக் கழக நிர்வாகிகளும், தொகுதி கழக நிர்வாகிகளும், கிளைக் கழக நிர்வாகிகளும், கழகத் தோழர்களும் ஏராளமானோர் இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை காரைக்கால் மாநில தி.மு.க. கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### ரஷியாவில் வெள்ளம்!

மாஸ்கோ, ஆக.15 -

ரஷியாவின் கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷியாவின் கிழக்குப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. முன்னதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் கனூன் புயல் ஜப்பானுக்கு கனமழையை கொடுத்தது. பின்னர், அந்த புயல் கொரிய தீபகற்பம் நோக்கி நகர்ந்தது. ரஷியாவின் கிழக்கு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. கனமழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் 405 குழந்தைகள் உள்பட 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ப்பட்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளின் முழக்கங்களோடு 10,000 க்கும் மேற்பட்ட மகளிர் பங்கேற்ற மாபெரும் எழுச்சிப் பேரணி கடலூரில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைக்கிணங்க, கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஏற்பாட்டில், லீமா ஐயப்பன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் கீதா குணசேகரன், சுமதி ரங்கநாதன், மகேஸ்வரி விஜயன், ராதிகா பிரேம்குமார், கீர்த்தனா ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் டாக்டர் பிரவீன் ஐய்யப்பன் வரவேற்புரையில் நடைபெற்றது.



முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி, தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் – மேயர் சன். ராமநாதன் ஆகியோரின் வழிகாட்டுதல்படி, தஞ்சாவூர் மாநகர, 42 வது வட்ட கழகத்தின் சார்பில், மருத்துவக் கல்லூரி சாலை, ராஜப்பா நகர், பேருந்து நிறுத்தத்தில், முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களின் திருவுருவப்படம், அலங்கரிக்கப்பட்ட படத்திற்கு, தஞ்சாவூர் மத்திய மாவட்ட பொருளாளர், பொறியாளர் எல்.ஜி.அண்ணா, மாலை அணிவித்து, மலர்த்தூவி அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை, 42 வது வட்டக் கழகச் செயலாளர் இரா. ராஜமாணிக்கம், செய்திருந்தார், நிகழ்ச்சியில், சண்முகசுந்தரம், சதாசிவம். இ.எஸ். உதயநிதி, சிந்தனைக்கதிர், சந்திரசேகரன், ஏ.லோகநாதன், செல்வகுமார், விக்கி, சிவா, என்.எஸ்.மணி, வி.செந்தில்குமார், விஜய், கார்த்தி, பாலு, வி.ராமச்சந்திரன், என்.தனசேகரன், ஆட்டோ பழனி, பிரபு, மதி பாலன், தரும கருணாநிதி, ஆர் பழனியப்பன், மற்றும் கழக நிர்வாகிகள், திரளாக கலந்து கொண்டனர்.